முற்பகல் 11–30

3. 30–4–2019 ஆம் நாளன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தொடர்பாகக் கொடுத்துள்ள தீர்மானம் வலியுறுத்தப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம் இருங்கள், வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேரவைத் தலைவர் அவர்கள் தொடர்பாகக் கொடுத்துள்ள தீர்மானம் குறித்து, பேரவை விதி 68–ன்கீழ் அளிக்கப்பட்ட தீர்மானம், இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 179–ன்படியும், சட்டமன்றப் பேரவை விதி 69–ன்கீழும் 14 நாட்கள் முன்னறிவிப்பு காலம் முடிந்தவுடன் கூட்டப்பெறும் முதல் கூட்ட நாளில் அலுவல் பட்டியலில் சேர்க்கப்பெற வேண்டும் என்பதன் அடிப்படையிலும், 14 நாட்கள் முடிவடைந்த நிலையில் இத்தீர்மானம் பேரவைத் தலைவர் தொடர்புடையது என்பதாலும், இதுகுறித்த முடிவினை பேரவைதான் எடுக்க இயலும் என்பதாலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் 30–4–2019 ஆம் நாளிட்ட கடிதம் மற்றும் தீர்மானத்தினையும், 28–6–2019 ஆம் நாளிட்ட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் காணும் முடிவினையும் பேரவையின் முன்வைத்து, '30–4–2019 ஆம் நாளன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரால் கொடுக்கப்பட்ட தீர்மானம் வலியுறுத்தப்படவில்லை' என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. அறிவிப்புகள்

(அ) 'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் இலக்கினை எய்திடும் வகையில் 9–1–2018 முதல் 6–12–2018 வரையிலான 33 நாட்களுக்கான மற்றும் 14–வது சட்டமன்றப் பேரவையின் 23–5–2011 முதல் 8–12–2014 வரையிலான 155 நாட்களுக்கான நடவடிக்கைக் குறிப்புகள் மற்றும் 14–வது சட்டமன்றப் பேரவையின் பேரவைத் தலைவரின் தீர்ப்புரைகள் மற்றும் குறிப்புரைகள் தொகுப்பு இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 'காகிதமில்லா சட்டமன்றம்' என்ற இலக்கை எய்திடும் பணிகளின் தொடர்ச்சியாக இன்று (1–7–2019),*